திரு. அ. செல்லப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களும் சிறுவர்களும் சில பயங்கரமான விளையாட்டுகளில் ஈடுபடுகின்றபோது தவறி விழுந்து உயிரிழக்க நேரிடுகிறது. அவ்வாறு உயிரிழக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என முதலாளிகளை வற்புறுத்த இந்த அரசு முன்வருமா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சர்க்கஸ் நிறுவனம் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு Workmen's Compensation Act, தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் பொருந்தும் என கூறியிருக்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யானையை வைத்துத் தீனி போடுவதே பெரிய பிரச்சினை. பல யானைகளையும் மிருகங்களையும் வைத்து அவற்றை நல்லவிதமாக பழக்கி பல அரிய வித்தைகளைக் காட்டக்கூடிய நிறுவனங்களுக்கு நகராட்சி, பேரூராட்சி நிலங்களை வாடகை இன்றி இலவசமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: He is dialing wrong number. எனக்கு சம்மந்தமில்லாத கேள்வி.

பேருந்து ஓட்டுவதற்கான உரிமம்.

* வினா எண்.—166; திரு. கு. ரமணி, திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேருந்து ஓட்டுநர்களின் லைசென்ஸ் புதுப்பிக்க மூன்று வருடங்களுக்கு ரூ. 9 கட்டணம் இருந்ததை ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) லைசென்ஸ் புதுப்பிக்க தாமதமானல் அபராதம் போடப்படுகிறதா ?

(இ) ஆம், எனில் அபராதம் எவ்வளவு ?

(ஈ) லைசென்ஸ் புதுப்பிக்க வேறு என்னென்ன நிபந்தனைகள் உள்ளன ?

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) & (ஆ) ஆம்

(இ) லைசென்ஸ் புதுப்பிக்க 30 நாட்களுக்கு மேல் தாமதமானால் அபராதத் தொகை ரூ. 5 செலுத்த வேண்டும்.

(ஈ) நிபந்தனைகள் ஏதும் இல்லை. ஆனால் லைசென்ஸ் புதுப்பிக்க படிவம் ''பி'' பூர்த்தி செய்து லைசென்ஸ்சுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், மோட்டார் ஒட்டுகின்ற ஓட்டுநர்கள் அவர்களுடைய லைசென்சுகள் புதுப்பிப்பதற்கு 9 ரூபாயிலிருந்து 15 ரூபாய்க்கு லைசென்சு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் காலம் தாழ்ந்து புதுப்பித்தால் அவர்கள் மீது அபராதம் விதிக்கப்படுவதாக அமைச்சர் சொல்லுகிறார். பலவீனமான பகுதி மக்களுக்கு உதவி செய்கின்ற முறையில் அரசின் கொள்கை அமைந்திருக்கும்போது ஒரு தொழிலாளி தொழில் செய்ய, லைசென்சு எடுக்க அபராதம் விதிப்பதை ரத்து செய்யவேண்டும். பெயரளவுக்கு ஒரு கட்டணம் என்று போடுவதற்குப் பதிலாக இந்தக் கட்டணத்தை உயர்த்தி அரசாங்கத்திற்கு வருவாய் தேடுவது என்பதிலிருந்து மாறி இந்த அதிகக் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை. காரணம் லைசென்சு காலம் பூர்த்தியான 30 தினங்களுக்குள் அது புதுப்பிக்கப்பட வேண்டும். அப்படி லைசென்சை புதுப்பிக்காமல் பேருந்துகளை ஒட்டினால் அது சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருக்கிற காரணத்தால்தான், அந்தத் தவறுக்குக் குறைந்த தண்டனையாக இந்த 5 ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டண உயர்வால் சாதாரண தொழிலாளர்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும். அத்தோடு இந்தக் கட்டண உயர்வு எப்போதிலிருந்து அமுல்படுத்தப்படுகிறது என்பதை [அறிய விரும்புகிறேன். அதேபோல, வெளி மாநிலங்களில் போய் கண்டக்டர் லைசென்சு பெறுவதற்கு நிரம்பவும் செலவு செய்கிறார்கள். அதைப்போக்க அரசாங்கம் நம்முடைய மாநிலத்திலேயே கண்டக்டர் லைசென்சு கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பிப்பதற்கு 9 ரூபாயிலிருந்து 15 ரூபாய் உயர்த்தியது 1—1—1978 முதல் அமுலுக்கு வந்திருக்கிறது.

நடத்துநர்களுக்கு நமது மாநிலத்தில் உரிமை வழங்குவது நிறுத்தப் பட்டதற்குக் காரணம் ஏராளமான பேர்கள் வெயிட்டிங் லிஸ்டில் ஏற்கனவே இருக்கிற காரணத்தால் புதிதாக யாருக்கும் கொடுக்க வேண்டாமென்று நிறுத்தப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9–50]

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, பேருந்து லைசென்சு பெற்றவர்கள் ஏராளமானவர்கள் இருப்ப தாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர் களே, ஏராளமான பேர் இருப்பதாக நான் கூறியது நடத்து நர்கள், ஓட்டுநர்கள் அல்ல.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர்களே, இப் போது அந்த லைசென்சை ரின்யூயல் செய்வதற்கு தனியாக ஒரு கட்டணம் வசூலித்து, புதுப்பிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஒரு தடவை லைசென்சு எடுத்துவிட்டால், எப்படி ஒரு கல்வி படித்து பட்டம் பெற்றவர்கள் மறுமுறை தேர்வு எடுக்க வேண்டும் என்று சொல்வது இல்லை, அவர்கள் அந்தத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். ஆகவே, மறுபடியும் ரின்யூ செய்வதற்கு ரூ. 15 வசூலிப்பது ‘ரூபாய் 9 வசூலிப்பது என்பது சரிதானா? அதை நீக்கி விட்டு ஒரு தடவை வாங்கினால் போதும் என்று அரசு அறிவிக்குமா? அப்படிப்பட்ட நடைமுறை கொண்டுவர அமைச்சர் முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அப் படிப்பட்ட நடைமுறை கொண்டு வருவதற்கு இயலாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த உரிமம் கொடுக்கப்பட்ட காலம் முடிந்த பிறகு, அந்த ஓட்டுநர்கள் அந்த உரிம காலத்தில் தவறு இழைத்து இருப்பார்களானால் அந்த உரிமத்தை ரத்து செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவைகளையெல்லாம் பரிசீலிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் உரிமம் புதுப்பிக்கப் பட வேண்டும் என்ற அடிப்படை வைக்கப்பட்டு இருக்கிறது.